புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜூலை 11, 2024 • புரட்சி 24 • முழக்கம் 26 • விலை ரூ.3.00

# ஆம்ஸ்ட்ராங் மறைவு
# சமூகத்திற்கான பேரிழப்பு

### கழகத் தலைவர் கொளத்தூர் மணி இரங்கல் செய்தி!



தமிழ்நாடு பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவரும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வந்தவருமான தோழர் ஆம்ஸ்ட்ராங் அவர்கள் 05.07.24 அன்று இரவு கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார் என்கின்ற செய்தி மிகுந்த அதிர்ச்சியும் வேதனையையும் அளிக்கிறது.

தோழர் ஆம்ஸ்ட்ராங் அவர்கள் இட ஒதுக்கீட்டு உரிமை குறித்து தெளிவான பார்வைக் கொண்டவர். அவரிடம் நெருங்கி பழகும் பொழுது தான் அவருடைய ஆழ்ந்த சிந்தனைகளை அறிய முடிந்தது.

சமூகம் குறித்தான பெரிய அக்கறையையும் இந்த சமூகத்தில் உள்ள சிக்கல்கள் குறித்த தெளிவும் சமூக சிக்கல்களை தீர்க்கும் பேரார்வம் கொண்டவராகவும் அவர் இருந்தார்.

தோழரின் இழப்பு அவரது கட்சிக்கான இழப்பாக மட்டுமல்லாமல் சமூகத்திற்கான ஒரு இழப்பாகவே நாம் பார்க்கிறோம்.

கடந்த பல ஆண்டுகளாக முழுமையாக தன்னை ஜாதி ஒழிப்புப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டு பணியாற்றிய தோழர் ஆம்ஸ்ட்ராங் அவர்களை இழந்து வாடும் பகுஜன் சமாஜ் கட்சித் தோழர்கள், நண்பர்கள், குடும்பத்தார் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**கொளத்தூர் மணி**
**தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்.**
06.07.2024.

## புதிய குற்றவியல் சட்டங்களில் திருத்தம்
## ஒரு நபர் குழு அமைத்தது தமிழ்நாடு அரசு!

ஒன்றிய பாஜக அரசின் புதிய குற்றவியல் சட்டங்களில், மாநில அளவில் திருத்தங்கள் மேற்கொள்ள ஓய்வுபெற்ற நீதிபதி சத்ய நாராயணன் தலைமையில் ஒரு நபர் குழு அமைத்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

இந்திய தண்டனைச் சட்டம், இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய சாட்சியங்கள் சட்டம் ஆகிய சட்டங்கள் நடைமுறையில் இருந்து வந்த நிலையில், ஒன்றிய அரசால் அவை ‘பாரதிய நியாய சன்ஹிதா - 2023’, ‘பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா - 2023’ மற்றும் ‘பாரதிய சாக்ஷியா சட்டம் - 2023’ என மாற்றப்பட்டு, ஜூலை 1 முதல் இச்சட்டங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன.

### நாடு முழுவதும் வெடித்த போராட்டம்

அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக, சமஸ்கிருதத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, நாடாளுமன்றத்தில், முறையான விவாதங்கள் ஏதுமின்றியும், மாநிலங்களின் கருத்துகளைக் கேட்காமலும், அவசர அவசரமாக கொண்டு வரப்பட்டுள்ள இச்சட்டங்களிலுள்ள பல்வேறு பிரிவுகளை எதிர்த்து நாடெங்கும் எதிர்ப்புகளும், போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

### அவசரக் கோலத்தில் அள்ளித் தெளிப்பு

நாடாளுமன்றத்தில் 146 உறுப்பினர்களை இடைநீக்கம் செய்துவிட்டு, மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களை அறிந்து கொள்ள விருப்பம் இல்லாமல், ஒன்றிய அரசு அவசர கோலத்தில் இச்சட்டங்களை நாடாளுமன்றத்தில் விவாதங்கள் ஏதுமின்றி, கடந்த 2023-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிறைவேற்றியது.

### தமிழ்நாட்டின் எதிர்ப்பு

நாடு முழுவதும் உள்ள பெரும்பான்மையினரின் கருத்தினைப் பிரதிபலிக்கும் வகையில், இந்தப் புதிய சட்டங்களில் என்னென்ன பிரச்சனைகள் உள்ளன என்பதை தெளிவாக தமிழ்நாடு முதல்வர் தனது 17.6.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா-வுக்கு ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

ஒன்றிய அரசின் இந்த புதியச் சட்டத்தின் சில அடிப்படைப் பிரிவுகளில் தவறுகள் இருப்பதோடு, மாநில அரசுகளிடமிருந்து முழுமையாக கருத்துகளைப் பெறாமல் இவை இயற்றப்பட்டுள்ளதாக தனது கடிதத்தில் சுட்டிக்காட்டி இருந்த முதல்வர், இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்து வதை ஒன்றிய அரசு ஒத்திவைக்க வேண்டும் என்று, முறையாக அனைத்து மாநில அரசுகளின் கருத்துகளைப் பெற்ற பின்னரே இவ்விஷயத்தில் முடிவெடுக்க வேண்டும் என்று தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டிருந்தார்.

### ஆலோசனைக் கூட்டம்

இந்த நிலையில், தமிழக அரசின் சார்பில் இப்புதிய சட்டங்களில் என்னென்ன சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில், ஜூலை 8 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

## ‘அறிவுஜீவி ஆம்ஸ்ட்ராங்’

பெரும் மதிப்பிற்குரிய பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் தோழர் ஆம்ஸ்ட்ராங் சமூக விரோதக் கும்பலால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தி மிகுந்த மன வேதனையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

அவர் வளர்ந்து வரும் இளம் தலைவர் ஆவார். நம்முடைய பார்வையில் ஆம்ஸ்ட்ராங் அவர்கள் ஒரு ‘அறிவு ஜீவி’ அவர் பவுத்தத்தில் ஆழ்ந்த நம்பிக்கையும், அம்பேத்கரியத்தை முழுமையாக கற்றறிந்து அதில் கரைதேர்ந்தவர் ஆவார். அம்பேத்கர் எந்த அத்தியாயத்தில் என்ன பேசியிருக்கிறார் என்பதை நினைவில் வைத்து பேசக்கூடிய அளவுக்கு ஆற்றல் வாய்ந்தவர் தோழர் ஆம்ஸ்ட்ராங்.

அவர் ஒரு அரசியல் கட்சியில் இருந்தாலும், ஒரு போதும் அரசியல் முரண்களில் சிக்கிக்கொள்ளவில்லை. தன்னுடைய கட்சித் தோழர்களை அம்பேத்கரிய சிந்தனையில் வளர்த்தெடுக்க வேண்டும் என்பதில் முழு ஈடுபாடுக் கொண்டு பணியாற்றியவர் தோழர் ஆம்ஸ்ட்ராங். அவர் பொதுக்கூட்டங்களை விட அதிகளவில் பயிற்சி வகுப்புகளைத் தான் நடத்துவார்.

மேலும் தோழர் ஆம்ஸ்ட்ராங், திராவிடர் விடுதலைக் கழகத்திற்கு மிகவும் நெருக்கமானவராகத்தான் இருந்து வந்தார். குறிப்பாக திராவிடர் விடுதலைக் கழக கருத்தரங்குகளை நடத்துவதற்கு பெரம்பூரில் தனது கட்சி அலுவலகத்தில் உள்ள ஒரு அரங்கை கட்டணம் ஏதும் பெறாமல் வழங்கினார்.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் மீது எங்களுக்கு மிகுந்த நம்பிக்கையும், மரியாதையும் உண்டு. உங்கள் இயக்கம் ஜாதி ஒழிப்புப் பணிகளை சிறப்பாக செய்து வருகிறது என்பதை நான் அறிவேன். எனவே எங்களது அலுவலகத்தை நீங்கள் எப்போது வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற சுதந்தரமான உரிமையை நமக்கு வழங்கினார்.

இளம் வயதில் பல வழக்கறிஞர்களை அம்பேத்கரிய, பௌத்த வழியில் உருவாக்கியவர் தோழர் ஆம்ஸ்ட்ராங் அவர்கள். இயக்கத் தோழர்களை கருத்தியல்ரீதியாக உருவாக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் செயல்பட்டுவந்த இளம் தலித் தலைவர் ஒருவரை தமிழ்நாடு இன்றைக்கு இழந்து நிற்கிறது என்பது கவலைக்குரிய ஒன்றாகும்.

தோழர் ஆம்ஸ்ட்ராங் அவர்களின் மறைவுக்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், அவரை இழந்துவாடும் அவரது குடும்பம் மற்றும் கட்சித் தோழர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**விடுதலை இராசேந்திரன்**
**பொதுச்செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்**
06.07.2024

## நேரில் மரியாதை

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் தோழர் ஆம்ஸ்ட்ராங் அவர்களின் உடலுக்கு கழகத் தலைமை நிலையச் செயலாளர் தோழர் தபசி குமரன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது..

இதில் வட சென்னை மாவட்ட அமைப்பாளர் சேத்துப்பட்டு இராசேந்திரன், தட்சிணாமூர்த்தி மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## தலையங்கம்

# மது மட்டும்தான் போதையா?

கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாராயம் குடித்து 65 பேர் உயிரிழந்த துயரமான சம்பவம் ஜூன் மாத இறுதியில் நடைபெற்றது. கள்ளச்சாராயம் தடை செய்யப்பட்ட ஒன்றாக இருந்தாலும், சட்டத்திற்குப் புறம்பாக காய்ச்சப்படுவதும், அதனால் அவ்வப்போது இதுபோன்ற உயிரிழப்புகள் நிகழ்வதும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. இதை கட்டுப்படுத்த வேண்டிய காவல்துறையே, சாராய வியாபாரிகளுடன் திரைமறைவு உடன்படிக்கைகளை செய்துகொண்டு வருமானம் ஈட்டும் வேலையில் ஈடுபடுகிறது என்பதுதான் பரவலான குற்றச்சாட்டு. எனவே காவல்துறை நியாயமாக செயல்பட்டாலே கள்ளச்சாராயத்தால் ஏற்படும் உயிரிழப்புகளை பெரும்பாலும் தடுத்துவிட முடியும். ஆனால் அதற்காக ஒட்டுமொத்தமாக மதுவை ஒழிக்க வேண்டுமென்று பேசுவதோ, அதுகுறித்த கோரிக்கைகளை எழுப்புவதோ அவசியமற்றது. இருப்பினும் அரசியலுக்காக இதுபோன்ற கோரிக்கைகள் எழுப்பப்படுவது வாடிக்கையாகி விட்டது.

ஒருவேளை மதுவை ஒழிப்பதுதான் கள்ளச்சாராய மரணங்களை தடுப்பதற்கான ஒரே தீர்வு என்று கூறுவார்களேயானால், மது மட்டுமே போதை இல்லை. ஆன்மீகம் அதைவிட மிகப்பெரிய போதையாக இந்த நாட்டில் உருவெடுத்துக்கொண்டிருக்கிறது என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. குறிப்பாக ஜூலை இரண்டாம் தேதி உத்தரப் பிரதேசத்தின் ஹத்ராஸ் மாவட்டம் சிக்கந்தரால் நகர் அருகே உள்ள புல்ராய் முகல்கடி என்னும் கிராமத்தில், போலே பாபா என்னும் ஆன்மிகச் சொற்பொழிவாளர் நடத்திய நிகழ்ச்சியில் கூட்ட நெரிசலில் சிக்கி 121 பேர் உயிரிழந்துள்ளனர். 80,000 பேர் கூட வேண்டிய இடத்தில் இரண்டரை இலட்சத்திற்கும் அதிகமானோர் கூட அனுமதித்ததே இந்த உயிரிழப்புகளுக்கு காரணமாகியுள்ளது.

காலால் மிதிக்கப்பட்டு, விலா எலும்புகள் உடைக்கப்பட்டு, மூச்சித் திணறி பெண்கள், குழந்தைகள் பாரபட்சமின்றி இறந்திருக்கிறார்கள். இத்தகைய பெரும் கூட்டத்தில் அசம்பாவிதம் ஏதேனும் ஏற்பட்டால் அதை எதிர்கொள்ளக்கூட உத்தரப் பிரதேச சாமியார் ஆதித்யநாத் அரசு தயாராக இல்லை. மருத்துவ ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. மானுடத்தன்மை அற்ற முறையில் நடந்திருக்கிற இந்த உயிரிழப்புகளைக் கைகட்டி, வாய் பொத்தி வேடிக்கைப் பார்த்திருக்கிறது உத்தரப் பிரதேச அரசு. கள்ளச்சாராயத்திற்கு எதிராக கொதித்த எவரும் இதுவரை, “ஆன்மீகம் என்னும் போதைதான் இந்த மரணங்களுக்குக் காரணம், எனவே ஆன்மீகத்தை தடைசெய்ய வேண்டும், மத நிகழ்ச்சிகளை தடை செய்ய வேண்டும், கோயில்களை மூட வேண்டும்” என்று கேட்கவில்லை.

கள்ளச்சாராய மரணங்களைப் போல இத்தகைய ஆன்மீக விழாக்களில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழப்பதும் அவ்வப்போது நடந்துகொண்டே தான் இருக்கிறது. 1954ஆம் ஆண்டு பிரயாக் கும்பமேளாவில் 800க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது தொடங்கி, 2022 ஜனவரியில் ஜம்மு & காஷ்மீரில் வைஷ்ணோ தேவி கோயில் விழாவில் ஏற்பட்ட பக்தர்கள் இடையிலான மோதலில் 12 பேர் உயிரிழந்தது வரையில் எண்ணற்ற உதாரணங்கள் நம்மிடையே உள்ளன. ஒட்டுமொத்தமாக கடந்த 20 ஆண்டுகளில் இதுபோன்ற மத வழிபாட்டு நிகழ்வுகளின்போது, ஏற்பட்ட விபத்துகளால் 2,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதாக ஊடக செய்திகள் கூறுகின்றன.

கள்ளச் சாராய விவகாரத்திலாவது, சாராயம் காய்ச்சுபவர்கள் கைது செய்யப்படுகிறார்கள், சட்டத்தின் முன் நிறுத்தப்படுகிறார்கள். ஆனால் ஆன்மீக நிகழ்ச்சியில் ஏற்படும் மரணங்களுக்கு எந்த நீதியும் கிடைப்பதில்லை. இதுபோன்ற சம்பவங்களில் தொடர்புடையவர்களுக்குக் கடும் தண்டனை விதிக்கப்பட்ட முன்னுதாரணமே இந்த நாட்டில் இல்லை. இத்தகைய அவல மரணங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க எந்த ஆக்கப்பூர்வமான திட்டமும், எண்ணமும் ஒன்றிய அரசிடம் இல்லை. மாறாக, சாமியார்களை ஊக்குவிப்பதை மட்டும் மிகத் தெளிவாகச் செய்கிறது ஒன்றிய அரசு. சாமியார் போலே பாபாவைப் பொறுத்தவரையில் வெறும் ஆன்மீக நபராக மட்டும் அவரை சுருக்கிவிட முடியாது. இவருடைய உண்மையான பெயர் சூரஜ் பால். காவல்துறையில் காவலராகப் பணியாற்றிய இவர் 1990-களில் விருப்ப ஓய்வில் சென்று, மேற்கு உத்தரப் பிரதேசத்தில் உள்ள தனது சொந்த ஊரான காஸ்கஞ்சிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சத்சங்கங்களை நடத்தத் தொடங்கினார். உண்மையுடன் எப்போதும் ஒன்றி இருப்பதுதான் ‘சத்சங்கம்’ என்கிறார்கள். ஆனால் ஆன்மீகம் என்பது உண்மை அல்ல, அது நம்பிக்கை சார்ந்தது. ஆக அந்த வார்த்தையே போலியானது.

போலே பாபா முதலில் அரிய வகை நோய்களை குணப்படுத்தும் ஆற்றல் தனக்கு இருப்பதாகக் கூறியே மக்களைக் கவர்ந்தார். 2000ஆம் ஆண்டில் இறந்த சிறுமிக்கு உயிர் கொடுப்பதாகக் கூறி பரபரப்பை ஏற்படுத்தினார். அதற்காக அவர் கைதும் செய்யப்பட்டார். அந்த கைது சம்பவம்தான் இந்த சாமியாருக்கு பெரும் விளம்பரத்தைக் கொடுத்தது. அடிப்படையில் இந்த சாமியார் பட்டியல் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால், பெரும்பாலான தலித் மக்கள் இவரை அப்படியே நம்பவும், ஏற்றுக்கொள்ளவும் தொடங்கினர். உத்தரப் பிரதேசத்தின் எட்டா, ஹத்ராஸ், புலந்த்சாகர், அலிகார் மற்றும் குர்ஜா மாவட்டங்களிலும், அருகில் இருக்கும் ராஜஸ்தான், மத்தியப் பிரதேசத்திலும் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் பிரபலமானார். தற்போது ஹத்ராஸில் கூடியவர்களிலும் பெரும்பகுதி பட்டியல் சமூகத்தினரே.

இத்தகைய சாமியார்களால் பட்டியல் சமூகத்தினர் அம்பேத்கரிய சிந்தனைகளுக்குள் ஈர்க்கப்படாமல் தடுக்கப்பட்டு, இந்து மதப் போலிப் பெருமைகளை உள்வாங்குகின்றனர் என்ற கவலை அம்பேத்கரிய செயற்பாட்டாளர்களிடமிருந்து எழத் தொடங்கியிருக்கிறது. இந்து மதப் பெருமை நாளடைவில் இந்துத்துவ அரசியலுக்குள் இழுக்கும் வேலையையும் செய்துவிடுகிறது. எனவே தனிநபரைப் பாதிக்கும் சாராய போதையை விட, சமூகத்தையே சீரழிக்கும் ஆன்மீக போதை பேராபத்தானது. அதற்கு எதிராகவும் குரல்கள் எழ வேண்டும்.

# பாபாக்களுக்கு ஆதரவு பெருகுவது ஏன்?

*இந்தியாவில் பாபாக்கள், கடவுள் அவதாரங்கள் பெருகி வருவதற்கான காரணம் என்ன? Times Of India நாளேடு (ஜூலை7) ஒரு விரிவான கட்டுரையை எழுதியுள்ளது. பெரும்பாலான பாபாக்கள் சமூகத்தில் விளிம்புநிலையில் இருந்தே வருகிறார்கள். உத்திரப்பிரதேசத்தில் போலே பாபாவின் பேச்சைக் கேட்க வந்தவர்களில் பெரும்பாலும் தலித் மக்கள். அதில் பெண்களே அதிகம். பாபாவோ ஜாதவ் என்ற தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவர். காவல்துறையில் பணியாற்றி விருப்ப ஓய்வுப் பெற்று தன்னை கடவுள் அவதாரமாக அறிவித்துக் கொண்டவர்.*

*அதே நேரத்தில் பொருளாதாரத்தில் வலுவாக உள்ள மேல்தட்டு மக்களும் அவருக்கு சீடர்களாக இருக்கிறார்கள். தலித் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் பாபாக்களை நோக்கி வருவதற்கான காரணம் ஜாதியக் கட்டமைப்பு தான் என்று சமூகவியலாளர்கள் கூறுகிறார்கள்.*

*சமூகவியல் பேராசிரியரான கல்யாணி இது குறித்து கூறுகையில்:- ஜாதிய சமூகத்தில் பல்வேறு தடைகளையும், சுமைகளையும் விளிம்புநிலை மக்கள் சுமக்கிறார்கள். பாபாவின் சீடர்களாக மாறும்போது இந்த தடைகளில் இருந்து விலகி நிற்க முடிகிறது. ‘தேவி சக்ஷா சௌதா’ என்ற ஆசிரமத்தை நடத்திவரும் குர்மீத் ராம் ரஹீம் சிங் என்பவர் மற்றொரு செல்வாக்குமிக்க பாபா ஆவார். பெயரிலேயே இந்து - முஸ்லீம் - சீக்கிய அடையாளத்தைக் கொண்டிருக்கும் அவருக்கு பஞ்சாப், ஹரியானா மாநிலத்தில் பல்லாயிரக்கணக்கான தலித் சீக்கியர்கள் இவரது சீடர்களாக இருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு இவர் கைது செய்யப்பட்ட போது பஞ்சாப் - ஹரியானா மாநிலங்களில் மிகப்பெரிய அளவில் கலவரமே வெடித்தது.*

*ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் சமூகவியல் பேராசிரியராக பணியாற்றும் அஜய்குமார், ஜாதியக் கட்டமைப்பில் புறக்கணிக்கப்படுபவர்கள் இப்படி பாபாக்களின் சீடர்களாக மாறுவதன் மூலம், சமூக அதிகாரங்களையும், சமத்துவ உணர்வுகளையும் பெறுகிறார்கள். சமூகக் கட்டமைப்பில் இந்த உணர்வுகள் அவர்களுக்கு கிடைப்பதில்லை. பாபாக்களின் சீடர்கள் என்று வருகிற போது இந்த உணர்வு அவர்களுக்கு எளிதாக கிடைக்கிறது.*

*ஜாதியப் பாகுபாடுகள், போதைப் பழக்கவழக்கங்களுக்கு எதிராக இந்த பாபாக்கள் முகாம்களை நடத்துகிறார்கள். குறிப்பாக குடிகாரக் கணவர்களால் பாதிக்கப்பட்ட பெண்கள், பாபாக்களின் கருத்துகளைக் கேட்கும் போதும் அவர்கள் ஆறுதல் அடைவதாக கூறுகிறார்கள். மதுவுக்கு எதிராகவும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவாகவும் இந்த பாபாக்கள் பேசுவதால் இவர்கள் மிகுந்த நம்பிக்கையைப் பெறுகிறார்கள். தங்களுக்கு ஏற்படும் குடும்ப அழுத்தங்களில் இருந்து மீள பாபாக்களின் உரை மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.*

*அவர்கள் நோய்களைத் தீர்ப்பது, தங்களிடம் அற்புத சக்தி ஒன்று இருக்கிறது என்று நம்ப வைப்பதும் ஒரு மிகப்பெரிய கருவியாக இருக்கிறது. ஜாதியக் கட்டமைப்பு உருவாக்கி வைத்திருக்கிற அழுத்தங்கள், அவர்கள் சந்திக்கின்ற சமூகத் தடைகள் என இவைகளில் இருந்து வெளியேறி பாபாக்களின் சீடர்களாக மாறும் போது இந்து சமூகக் கட்டமைப்புக்கு மாற்றாக கூடுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்கிறது என்ற காரணத்தினால் தான் பாபாக்களுக்கு சீடர்கள் பெருகிவருகிறார்கள் என்பது சமூக ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.*

*ஆனாலும் இந்த பாபாக்கள் மீது இவர்கள் வைக்கும் நம்பிக்கை மூட நம்பிக்கைகளாக மாறி, பக்தி உணர்வு என்பது பக்தி வெறியாக மாறி அவர்களது சிந்தனைகளை முடக்கிவிடும் ஆபத்துகளும் இதில் அடங்கியிருக்கிறது.*

---

முதல் பக்கத் தொடர்ச்சி

*இந்தக் கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசின் தலைமை வழக்குரைஞர், தலைமைச் செயலாளர், உள்துறை முதன்மைச் செயலாளர், பொதுத் துறைச் செயலாளர், சட்டத்துறை செயலாளர், காவல்துறை இயக்குநர் மற்றும் அரசு குற்றவியல் வழக்குரைஞர் ஆகியோர் கலந்துகொண்டனர்.*

**நீதிபதி எம். சத்யநாராயணன்**

*இந்தக் கூட்டத்தின் முடிவில், புதிய சட்டங்களில் மாநில அளவில் பெயர் மாற்றம் உட்பட என்னென்ன திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்பதை ஆராய்ந்து, அரசுக்கு பரிந்துரைத்திட, சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி எம். சத்யநாராயணன் தலைமையில் ஒரு நபர் குழுவை அமைத்திட தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டார்.*

*இக்குழு இந்தப் புதிய சட்டங்கள் குறித்து தெளிவாக ஆராய்ந்து, மாநில அளவில் வழக்கறிஞர்கள் சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடம் ஆலோசித்து, மாநில அளவில் என்னென்ன திருத்தங்களைக் கொண்டு வரலாம் என்பது பற்றிய தனது அறிக்கையை ஒரு மாத காலத்துக்குள் அரசுக்கு வழங்கும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

---


**புரட்சிப் பெரியார் முழக்கம்**

ஆண்டு சந்தா ரூ.300/-

ஐந்தாண்டு சந்தா ரூ.1500/-

கூகுள் பே எண் : 6369776351

தொடர்புக்கு : 8973341377

## மூத்த பத்திரிகையாளர் சிவசுப்பிரமணியம் விவரிக்கிறார் [2]

# வீரப்பனிடம் இருந்து ராஜ்குமாரை மீட்டதில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் பங்கு

**23.06.2024 அன்று கொளத்தூரில் நடைபெற்ற கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் 77வது பிறந்தநாள் விழாவில் மூத்த பத்திரிகையாளர் சிவசுப்ரமணியம் ஆற்றிய வாழ்த்துரை. கடந்த இதழின் தொடர்ச்சி...**



*காலை 7:30 மணிக்கு தொடங்கி மாலை 5:30 மணி வரைக்கும் இருவரும் பேசினார்கள். அந்த பேச்சில் ராஜ்குமார் கடத்தப்பட்டது தொடர்பாக எதுவும் இல்லை. முழுக்க முழுக்க உக்கம்பருத்திக்காடு, செங்கப்பாடி என சுற்றுவட்டார ஊர்களைப் பற்றியே பேசினார்கள். கடைசியாக மணி அண்ணன், ராஜ்குமாரை எப்போது வெளியில் விடுவீர்கள் என்று வீரப்பனை பார்த்து கேட்டார். நீங்கள் வேண்டுமானால் இப்போதே கூட்டிச் செல்லுங்கள் என்றார் வீரப்பன். அப்போது அண்ணன், வேண்டாம் நான் வந்ததே யாருக்கும் தெரியாது. தமிழ் (சிவசுப்பிரமணியம்) வரச் சொன்னார் என்று வந்தேன். நாம் சந்திச்சதுக்கு அடையாளமாக ஆடியோ கேசட் மட்டும் பேசி பதிவு செய்து கொடுங்கள் என்று மணி அண்ணன் கேட்டுக்கொண்டார். கேசட்டை வாங்கிக் கொண்டு அண்ணன் புறப்பட்டார்.*

### கொளத்தூர் மணியின் அணுகுமுறை

*வீரப்பனின் இந்த அணுகுமுறை மணி அண்ணனுக்கு மிகவும் பிடித்துவிட்டது. வீரப்பனுக்கும் மணி அண்ணனின் அணுகுமுறை மிகவும் பிடித்துவிட்டது. அடுத்ததாக கர்நாடகா முதலமைச்சரை சந்தித்த போது அவருக்கும் மணி அண்ணனின் அணுகுமுறை பிடித்துவிட்டது. இது சாத்தியமாகும் என்பதற்கு பிறகு அடுத்தடுத்த நகர்வுகள் கிட்டத்தட்ட 50 நாட்கள், ஒவ்வொரு நாள் இரவும் சத்தியமங்கலம் காட்டிற்கு செல்வோம். விடியற்காலை 4 மணி வரைக்கும் வீரப்பனோடு பேச்சுவார்த்தை நடக்கும். காலை 4:30 மணிக்கெல்லாம் புறப்பட்டு விடுவோம். அண்ணன் பெங்களூரு சென்று விடுவார். மீண்டும் இரவு வந்து சந்திப்புகள் நடைபெறும். இதேபோல தொடர்ந்து 50 நாட்கள் பேச்சுவார்த்தை நடத்தியதன் விளைவாக எந்தவொரு பிரச்சனையுமின்றி அந்த விசயத்தை வெற்றிகரமாக முடித்தார்.*

*இதற்கிடையில் வீரப்பன் கடத்தி வைத்திருந்த கன்னட நடிகர் ராஜ்குமாரின் உதவியாளர் நாகப்பா, கொடுவாள் எடுத்து வீரப்பனின் தலையில் வெட்டுகிறார். 6 தையல் போடுமளவுக்கு பலமான வெட்டு மற்றும் கை நரம்புகள் துண்டித்து விட்டது. இந்தச் சிக்கலை நாங்கள் மருத்துவ முறையில் சரி செய்தோம். அப்போது வீரப்பனின் கையில் மூன்று விரல்கள் சரிவர செயல்படவில்லை. இதற்கு தீர்வு என்னவென்று யோசிக்கும் போது, அது குறித்து அண்ணனிடம் தெரிவித்தேன். அண்ணனும் நானும் கவனித்தேன். மருத்துவரிடம் ஆலோசித்தேன். நோய் தொற்று ஏற்பட வாய்ப்பிருக்கிறது. எனவே அந்த மூன்று நரம்புகளையும் இணைத்து தைக்க வேண்டும் என்றார்.*

*சேலத்தில் பிரபலமான நரம்பியல் மருத்துவர் ஒருவரை சந்திக்கச் சென்றோம். மருத்துவமனையில் காத்திருந்தோம். நாங்கள் காத்திருப்பதைப் பார்த்துவிட்டார். உடனே அண்ணனை வரச் சொல்லுங்கள் என்றவுடன். நாங்கள் சென்று பேசினோம். அவர் ஏற்கனவே புலிகள் அமைப்பை சார்ந்தவர்கள் பலருக்கும் சிகிச்சையளித்தவர் என்ற அடிப்படையில் என்ன பிரச்சனை என்று கேட்டார். கையில் ஒருவருக்கு வெட்டுப்பட்டுவிட்டது. நரம்பு துண்டாகிவிட்டது. மூன்று விரல்கள் பாதிக்கப்பட்டுள்ளது என்றோம். எப்போது என்று சொல்லுங்கள். இரவு 11 மணிக்கு நான் வந்துவிடுகிறேன். பிளாஸ்டிக் சர்ஜன் வசதி என்னிடம் இல்லை. எனக்கு தெரிந்த மருத்துவர் ஒருவர் வைத்திருக்கிறார். 11 மணிக்கு மேல் அறுவை சிகிச்சை அரங்கிற்குள் செல்வோம். இரண்டு மணிநேரத்தில் சிகிச்சை முடிந்துவிடும். ஒருநாள் தங்கியிருந்தால் போதும். பின்னர் அவரை அனுப்பி விடலாம் என்றார்.*

*அண்ணனும் எதார்த்தமாக அவரை வீட்டுக்கெல்லாம் கூட்டிச் செல்ல முடியாது காட்டிற்கு தான் கூட்டிச் செல்ல வேண்டும் என்றார். ஆனால் வீரப்பன் அந்த விசயத்தில் கொஞ்சம் பயந்துவிட்டார். வந்தால் சிக்கலாகி விடும். அதனால் மருந்துகளிலே சரி செய்து கொள்ளலாம் என்று கூறினார். அதேபோல சரி செய்தோம்.*

### இழப்பீடு பெற்றுத்தந்த கொளத்தூர் மணி

*அந்த கடைசிக் கட்ட நிகழ்வுகளில் கூட வீரப்பன் 13 கோரிக்கைகளை முன்வைத்தார். ஆனால் அதில் ஒரு கோரிக்கை கூட நிறைவேறவில்லை. இந்த கோரிக்கைகளை எல்லாம் மணி அண்ணன் நிறைவேற்றித் தருவார் என்ற நம்பிக்கையில் ராஜ்குமாரை அனுப்பிவைத்தார். அதன் பிறகு தொடர்ந்து ஆறு ஏழு ஆண்டுகாலம் போராட்டம். அதில் குறிப்பாக நீதிபதி சதாசிவம் கமிசன். அது முழுமையாக நடந்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். வீரப்பன் தேடுதல் வேட்டையில் தமிழ்நாடு கர்நாடக அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். தொடர்ந்து எட்டாண்டு காலம் இதற்காக மக்களைத் திரட்டி, போராடி கிட்டத்தட்ட 89 பேருக்கு இழப்பீடு பெற்றதற்கு காரணமாக அமைந்தவர் மணி அண்ணன். இந்த வகையில் தன்மேல் வைக்கும் நம்பிக்கையை சிறிதும் குறையாத வண்ணமே அவரது பொது வாழ்வு இருக்கிறது.*

> **ஒரு ஜாதி சங்கத் தலைவரின் இன்றைய சொத்துமதிப்பு ஆயிரம் கோடியை தாண்டும். ஆனால் தலைவர் என்ற தகுதியில் இருந்து தன்னிடம் இருந்த சொத்து மதிப்பு குறைந்து ஒரு சுருங்கிய வட்டத்துக்குள் நின்ற தலைவர் யாரென்றால் அது அண்ணன் கொளத்தூர் மணி மட்டும் தான்.**

### குறைந்த சொத்துமதிப்பு

*என்னுடைய 32 ஆண்டு பத்திரிகை உலக வாழ்க்கையில் தலைவர் என்று சொல்லக்கூடிய ஒவ்வொருவருமே அந்த சொல்லை பயன்படுத்த ஆரம்பித்த ஒவ்வொரு வாரமும் அவர்களது சொத்து மதிப்பு உயர்ந்து கொண்டே செல்லும். ஒரு ஜாதி சங்கத் தலைவரின் இன்றைய சொத்து மதிப்பு ஆயிரம் கோடியை தாண்டும். ஆனால் தலைவர் என்ற தகுதியில் இருந்து தன்னிடம் இருந்த சொத்து மதிப்பு குறைந்து ஒரு சுருங்கிய வட்டத்துக்குள் நின்ற தலைவர் யாரென்றால் அது அண்ணன் கொளத்தூர் மணி மட்டும் தான்.*

*மணி அண்ணனின் வாழ்வியல் நிகழ்வுகளைப் பற்றி அறிந்து கொள்ள உக்கம்பருத்திக்காடு சென்ற போது அங்கு ஒரு புதிய ஊர் உருவாகியிருந்தது. அந்த புதிய ஊர் முழுவதும் கொளத்தூர் மணி அண்ணனின் நிலத்தில் உருவானது. இது எப்போது நிகழ்ந்தது என்று விசாரிக்கும் போது, நகரத்தில் இருந்து யாராவது ஊருக்குள் வருகிறார்கள் என்றால் அவர்களுக்கு அந்த இடத்தை மணி அண்ணன் எழுதிக் கொடுத்துவிடுவார். பழனிச்சாமி அண்ணன் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிடுவார். இப்படி மணி அண்ணன் அவர்களால் இலவசமாக இடம் கொடுக்கப்பட்டு உருவான ஊர்தான் இது என்றனர். இப்படி தன்னுடைய சக்தி முழுவதையும் இந்த இனத்திற்காகவும், இன மக்களுக்காகவும் கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கும் தலைவர் கொளத்தூர் மணி அண்ணன்.*

### கொளத்தூர் மணியின் உயர்ந்த பண்பு

*இவரது வரலாறுகளை முழுமையாக தொகுக்கும் பணிகளை மேற்கொண்டுவருகிறேன். இதே நேரத்தில் கொளத்தூர் மணி அண்ணன் காவல்துறைக்கு எதிரானவர் என்ற ஒரு பேச்சும் வழக்கத்தில் உள்ளது. ஆனால் இவர் காவல்துறையின் நம்பிக்கைக்கு உரியவராக, ஒரு சகோதரராகத்தான் இருந்து வருகிறார். குறிப்பாக இரண்டு நிகழ்வுகளைக் குறிப்பிட விரும்புகிறேன். அதில் ஒன்று. திராவிடர் விடுதலைக் கழகத்தின் அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி அவர்கள் ஒரு நிகழ்வை சொன்னார். நாங்கள் வேலூர் சிறையில் 18 மாதங்கள் இருந்தோம். எங்கள் மீது போடப்பட்ட வழக்கு பொய் வழக்கு என்று கூறி தள்ளுபடி செய்தனர். இந்த சமயத்தில் அண்ணனிடம், இந்த வழக்கை பொய்யாகப் பதிவு செய்த காவல்துறை மீது வழக்கு தொடுத்து இழப்பீடு பெறலாம் என்று கூறியிருக்கிறார். அதற்கு அண்ணன் நான் வழக்குப் போட மாட்டேன் என்றார். ஏன் என்று கேட்ட போது, ”விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் கொடுத்தோம், பயிற்சி கொடுத்தோம். இப்படி எல்லாமே செய்து கொண்டு இருக்கிறோம். இது இந்திய அரசியலமைப்புப்படி தவறானது. தண்டனைக்குரியக் குற்றம். நம்மை போலீசு பிடித்தார்கள், நீதிமன்றத்துக்கு கொண்டுவந்தார்கள், ஆனால் அவர்களால் நிரூபிக்க முடியவில்லை. அதனால் நாம் செய்யவில்லை என்று பொருள் இல்லை. அதற்கு எப்படி அவர்கள் மேல் புகார் தர முடியும்?. விட்டுவிடுங்கள்” என்றவுடன் இரத்தினசாமியும் இதை விட்டுவிட்டார். இதுதான் அண்ணனின் எதார்த்தமான நிலைமை.*

*கொளத்தூர் மணி அண்ணன் மீது நடவடிக்கை எடுத்த காவல்துறை அதிகாரிகள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் நினைத்திருந்தால் கிட்டத்தட்ட 40, 50 அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருப்பார்கள். அவர்கள் போட்டது உண்மையான வழக்காக இருக்கும், ஆனால் வெளியில் வரும்போது பொய் வழக்கு என்று ஆகிவிடும். இது அவருடைய புத்திசாலித்தனம். அந்த சூழ்நிலையிலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்ற மனநிலையில் தான் அண்ணன் இருந்துவருகிறார்.*

### உளவுத்துறைக்கு உதவியவர்

*வீரப்பன் உயிரோடு இருந்த காலகட்டத்தில் (2002-2004) அண்ணன், நான், கொளத்தூரில் இருந்து சில பேர் கொல்லேகால், சாம்ராஜ்நகர் வழியாக மைசூரு நீதிமன்றத்துக்குச் செல்வோம். அப்போது எங்களைக் கண்காணிப்பதற்காக கர்நாடக அதிரடிப்படையினர் 4,5 பேரை உளவுத்துறையினர் பணியில் அமர்த்தியிருந்தார்கள். பாலாறு, மாதேஸ்வரன் மலை, யானை திம்பம், தாளபெட்டா, ஆசனூர் உள்ளிட்ட ஒவ்வொரு இடங்களிலும் எங்களது நடவடிக்கைகளை கண்காணிப்பார்கள்.*

*அங்கு பாபு என்றொருவர் இருப்பார். அவர் இப்போது நம்முடன் தான் இருக்கிறார். அவரிடம் அண்ணன், ஏன் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்கிறீர்கள். நீங்கள் பாலாறுக்கு வந்து விடுங்கள், அங்கு உங்களை ஏற்றிக் கொள்கிறோம். திருப்பி பாலாறில் இறக்கி விட்டு விடுகிறோம். அனைத்தையும் நீங்களே கண்காணித்துக் கொள்ளுங்கள் என்றார். அதற்குப்பிறகு 2 ஆண்டுகாலம் அவரும் எங்களுடனேயே வந்தார். அன்றில் இருந்து அவர்தான் எங்கள் வண்டிக்கு ஓட்டுநரே. இப்படி உளவுத்துறைக்கும் உதவி செய்யக்கூடிய ஒரு மாண்பும், மனித நேயமும் அவருக்கு மட்டும்தான் உண்டு. கடந்த காலத்திலாகட்டும், நிகழ் காலத்திலாகட்டும் ஒரே மாதிரியான குணத்தைக் கொண்டவர் அண்ணன் கொளத்தூர் மணி. அவர் நூறாவது பிறந்தநாளை கொண்டாட வேண்டும், அதில் நாமும் கலந்து கொண்டு வாழ்த்த வேண்டும் என்பதுதான் எனது விருப்பம்.*

**(நிறைவு)**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கடத்தூரில் குடிஅரசு நூற்றாண்டு விழா

கடத்தூர் புதூரில் குடிஅரசு நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டம் - கொடியேற்றம் - இல்லத் திறப்பு விழா நடைபெற்றது.

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஒன்றியம் கடத்தூர் புதூரில் குடி அரசு நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டம் 06.07.2024 சனிக் கிழமை மாலை 6.00 மணிக்கு மடத்துகுளம் ஒன்றியக் கழகத் தோழர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

தொடக்கமாக காவை இளவரசனின் மந்திரமா தந்திரமா எனும் அறிவியல் விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது. அப்பகுதி வாழ் பொதுமக்கள் திரளாக பங்கேற்று ஆர்வத்துடன் இந்நிகழ்ச்சியை கவனித்தனர்.

பொதுக்கூட்டத்திற்கு மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் கணக்கன் தலைமை தாங்கினார். ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன் வரவேற்புரையாற்றினார். ஒன்றியச் செயலாளர் சிவானந்தம், கழகத் தோழர்கள் சரவணன், இலக்கியா, சங்கீதா, செல்வி, ஆரியமாலா, சிந்தனை செல்வி, தாரணி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

நிகழ்வில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, விசிக மாவட்ட செயலாளர் சதீசு, திராவிடத் தமிழர் கட்சி கொள்கை பரப்புச் செயலாளர் தங்கவேலு, திமுக ஒன்றியச் செயலாளர் சாகுல் ஹமீது, தி.வி.க. மாவட்டத் தலைவர் முகில் இராசு ஆகியோர் உரையாற்றினார்கள்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, குடிஅரசு நூற்றாண்டு குறித்து சிறப்புரையாற்றினார்.

கழகத்தலைவரின் உரைக்கு முன்னதாக தோழர் ஆம்ஸ்ட்ராங் மறைவுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடத்தூர் இளமதி அவர்கள் நன்றியுரையாற்றினர். இப்பொதுக்கூட்டத்தில்



அப்பகுதி வாழ் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

### இல்லத்திறப்பு விழா!

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் ஒன்றியம் கடத்தூர் புதூரில் கழக ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன் - செல்வி அவர்களின் வேலுச்சாமி - குமராயி அம்மாள் இல்லத்தின் திறப்பு விழா



07.07.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் கடத்தூர் புதூரில் நடைபெற்றது.

கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் புதிய இல்லத்தை திறந்து வைத்தார்.

இல்ல திறப்பு விழாவில் பங்கேற்ற உறவினர் நண்பர்கள் மத்தியில் மாநில அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, கழகப் பொருளாளர் துரைசாமி ஆகியோர் உரையாற்றினர்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் பெரியார் இயக்கம் தமிழர்களின் வாழ்வில் நிகழ்த்திய பண்பாட்டுப் புரட்சியை சுட்டிக்காட்டி இல்லத் திறப்பு விழாவை சுயமரியாதையோடு நடத்தும் பாங்கு குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

நிறைவாக இலக்கியா நன்றியுரை ஆற்றினார்.

நிகழ்வில் கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக ரூ.2000-யை அய்யப்பன் - செல்வி ஆகியோர் வழங்கினார்கள்.

இல்ல திறப்பு விழாவிற்கு முன்னதாக கடத்தூர், கடத்தூர் புதூர் ஆகிய இரு இடங்களில் கழகக் கொடி ஏற்ற நிகழ்ச்சி நடைபெற்றது. கழகத் தலைவர் அவர்கள் கழக கொடியினை ஏற்றி வைத்தார் நிகழ்வில் கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.

பொதுக் கூட்டம், கழகக் கொடியேற்றம் இல்லத்திறப்பு விழா ஆகியவற்றிற்கு கழகத் தலைமைக்குழு உறுப்பினர்கள் சூலூர் பன்னீர்செல்வம், காவை ஈஸ்வரன், கழக சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன், கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், திண்டுக்கல் மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி, மாநகர அமைப்பாளர் முத்து, மாநகரத் தலைவர் தனபால், திருப்பூர் தெற்குப் பகுதிச் செயலாளர் ராமசாமி, ருத்ராபாளையம் இராசேந்திரன், திருப்பூர் அய்யப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரியில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு பொதுக்கூட்டம்




கிருஷ்ணகிரி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் சுய மரியாதை இயக்க நூற்றாண்டு விழாப் பொதுக் கூட்டம் 30.06.2024 அன்று நடைபெற்றது.

மேட்டூர் டி.கே. ஆர் இசைக்குழுவின் பகுத்தறிவுப் பாடல்களுடன் பொதுக்கூட்டம் தொடங்கியது.

கூட்டத்திற்கு கிருஷ்ணகிரி மாவட்டத் தலைவர் வாஞ்சிநாதன் தலைமை தாங்கினார், மாவட்ட அமைப்பாளர் கிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார், கெலமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளர் செந்தில் முன்னிலை வகித்தார்.

புதுச்சேரி மாநிலத்தலைவர் லோகு.அய்யப்பன் சிறப்புரையாற்றினார்..

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சுயமரியாதை இயக்கம் தமிழ்நாட்டில் ஏற்படுத்திய சமூக மாற்றங்களை பட்டியலிட்டு நிறைவுரையாற்றினார்.

செந்தில் நன்றி கூற பொதுக்கூட்டம் நிறைவு பெற்றது.

## இளம்பிள்ளையில் கலந்தாய்வு கூட்டம்

இளம்பிள்ளை நகர திராவிடர் விடுதலைக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 08.07.2024 அன்று இளம்பிள்ளையில் மாவட்ட அமைப்பாளர் முத்துமாணிக்கம் கடையில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட அமைப்பாளர் முத்துமாணிக்கம் தலைமையில், சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட் முன்னிலையிலும் நடைபெற்றது.

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் தோழர் ஆம்ஸ்ட்ராங் சமூக விரோதிகளால் 05.07.2024 அன்று படுகொலை செய்யப்பட்டார். அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் விதமாக இளம்பிள்ளை நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் ஒரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும் தந்தை பெரியாரின் 146வது பிறந்தநாளையொட்டி இளம்பிள்ளையில் பொதுக் கூட்டம் நடத்துவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதில் சேலம் (கி) மாவட்டச் செயலாளர் டேவிட், மாவட்ட அமைப்பாளர் முத்துமாணிக்கம், நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் கிருஷ்ணன், சேலம் (கி) மாவட்ட இளைஞரணித் தலைவர் தங்கதுரை, இளம்பிள்ளை நகரத் தலைவர் ரமேஷ், சௌந்தரராஜன், தனசேகர், கோபி, திவ்யா, தமிழ்மணி, தமிழ், கவியரசு, சேகர், ரவி, ஜெகன், குட்டி, தங்கராஜ், அன்பு, மணிமாறன், மோகன்ராஜ், சதாசிவம், விஜி, நங்கவள்ளி நகரச் செயலாளர் பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : July 12, 2024

## புரட்சிப் பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதி!

**சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி – பாரதி இணையரின் 20ஆம் ஆண்டு இணையேற்பு நாளின் மகிழ்வாக கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு வளர்ச்சி நிதியாக ரூ.2000/– வழங்கினார்கள்.**

**பரிசல் கிருஷ்ணகுமார் ரூ.1000/– நன்கொடை வழங்கினார்.**

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran